3. குருதியினால் ஆற்றப்படும் இரு தொழில்களை எழுதுக

.............................................................................................................................

.............................................................................................................................

4. நாடி, நாளங்களுக்கிடையிலான கட்டமைப்பு ரீதியிலான வேறுபாடு இரண்டினை எழுதுக

.............................................................................................................................

.............................................................................................................................

5. இடது இதயவறைச்சுவர் அதிக தடிப்புடையதா்க இருப்பது ஏன்?

.............................................................................................................................

6. குருதி ஒருங்கொட்டல் என்றால் என்ன? அனுகூலம் யாது?

.............................................................................................................................

.............................................................................................................................

7. குருதிச்சுற்றோட்டத்தொகுதியை நன்கு பேணுவதற்கு பின்பற்றவேண்டிய வழிமுறைகள்?

.............................................................................................................................

.............................................................................................................................

## அலகு - 07, 08

# அங்கிகளின் தாங்கும் இயல்பும் அசைவும், தாவர வளர்ச்சிப்பதார்த்தங்கள்

* **பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**




**1. படத்தில் தாவரநுனி காட்டும் அசைவாக அமைவது**

1. நேர் ஒளித்திருப்ப அசைவு
2. நேர் புவித்திருப்ப அசைவு
3. எதிர் ஒளித்திருப்ப அசைவு
4. எதிர் புவித்திருப்ப அசைவு

**2. உருவில் காட்டப்பட்டுள்ள சாடித்தாவரத்தின் வளர்ச்சி தொடர்பான தவறான கூற்று**



1. தண்டின் நுனியில் உள்ள ஒட்சிசன் காரணமாக வளைந்துள்ளது
2. இது ஒளி நேர்திருப்ப அசைவின் விளைவாகும்
3. எதீன் எனப்படும் வளர்ச்சிப்பதார்த்தத்தினால் ஏற்பட்டது
4. புவி எதிர்த்திருப்ப அசைவின் காரணமாக ஏற்பட்டதாகும்

**3. போகம் தப்பிய காலங்களில் காய்கள் தோன்றுவதை தூண்டும் செயற்கை வளர்ச்சிப்பதார்த்தம் எது?**

1. சைற்றோசெல்
2. இன்டோல் அசற்றிக்கமிலம்
3. நப்தளின் அசற்றிக்கமிலம்
4. இன்டோல் பியூற்றிக்கமிலம்

**4. வயல்களில் அகன்ற இலைக் களை நாசினியாகப் பயன்படுத்தப்படுவது எது?**

1. IAA
2. IBA
3. 2, 4DPA
4. NAA

**5. கலப்பிரிவு வேகத்தை அதிகரிக்கச் செய்வது?**

1. ஒட்சின்கள்
2. சைற்றோகைனின்
3. ஜிப்ரெலின்
4. அப்சிசிக் அமிலம்

**6. பின்வரும் தொடர்புகளில் பிழையானது**

1. ஒட்சிசன்கள் - கலரூட்சி
2. சைற்றோகைனின் - கலப்பிரிவு
3. ஜிப்ரெலின் - தண்டு நீட்சி
4. எதீன் - தண்டுத்துண்டங்களில் வேர் கொள்ளச் செய்தல்

**7. மரங்களில் காய்களை உதிர்வதைக் குறைப்பதற்கும் விளைச்சளை விரைவாக பெறவும் உதவுவதற்கும் பயன்படுத்தக் கூடிய ஓமோன்கள் முறையே**

1. NAA, சைற்றோசெல்
2. NAA, ஒட்சின்
3. IBA, NAA
4. NAA, IAA

**8. நீர்த்தட்டுப்பாட்டின் போது இலைவாய்கள் மூடப்பட்டு ஆவியுயிர்ப்பைக்குறைக்கும் ஓமோன்**

1. எதீன்
2. ஒட்சிசன்
3. அப்சிசிக்கமிலம்
4. சைற்றோகைனின்

**9. கொடித்தோடை ஆதாரத்தைச் சுற்றி வளர்தல் எவ்வகையான அசைவு ?**

1. நேர்த் தொடுகைத் திருப்ப அசைவு
2. நேர் இரசாயனத் திருப்ப அசைவு
3. நேர் புவித்திருப்ப அசைவு
4. நேர் நீர்த்திருப்ப அசைவு

**10. நேர் இரசாயனத் திருப்ப அசைவுக்கு உதாரணம்**

1. தாவரத்தண்டுச்சி ஒளியை நோக்கி வளர்தல்
2. தாவர வேர் நிலத்தை நோக்கி வளர்தல்
3. தாவரவேர் நீருள்ள இடங்களை நோக்கி வளர்தல்
4. மகரந்த மணி முளைத்தலின் போது மகரந்தக் குழாய் சூலை நோக்கி வளர்தல்.

**11. ஒட்சிசன்கள் தொடர்பான பின்வரும் கூற்றுக்களில் சரியானது**

A - ஒட்சிசன்கள் ஒளி குறைவாக கிடைக்கும் பக்கத்தில் அதிகமாகவும் ஒளி கூடுதலாக கிடைக்கும் பக்கத்தில் குறைவாகவும் காணப்படும்.

B - இவை தண்டினதும் வேரினதும் கலங்களின் நீட்சியைக் கட்டுப்படுத்தும்

C - ஒட்சிசன்கள் ஒளி குறைவாக கிடைக்கும் பக்கத்தில் குறைவாகவும் ஒளி கூடுதலாக கிடைக்கும் பக்கத்தில் அதிகமாகவும் காணப்படும்.

D - தாவரங்கள் கிளை கொள்வதை நிரோதிக்கும்

1. ABC சரியானது 2. ABD சரியானது
3. ACD சரியானது 4. BC சரியானது

**12. பின்வருவனவற்றுள் மனிதனில் அசைவை ஏற்படுத்த உதவுவது அல்லது உதவுவன?**

1. தசையும் என்பும் 2. தசையும் தோலும்
3. தசையும் குருதியும் 4. என்பும் நரம்புகளும்

**13. அங்களின் இடப்பெயர்ச்சி அமைப்புக்கள் தொடர்பாக தவறான தொடர்பு**

1. நத்தை - தசைப்பிடிப்பான பாதம் 2. டொல்பின் - செட்டை
3. பறவைகள் - செட்டை 4. யானை - கால்

**14. சவுக்குமுளை மூலம் இடம்பெயர்வது**

1. அமீபா 2. கிளாமிடொமனசு 3. பரமேசியம் 4. நத்தை

**15. அவரையினத் தாவரங்களின் இலையின் அடியிலுள்ள புடைப்புக்கலங்களின் வீக்கவமுக்க மாற்றம் காரணமாக நடைபெறும் அசைவின் வகை**

1. முன்னிலை அசைவு 2. திருப்ப அசைவு
3. தொடுகை அசைவு 4. இரசாயன அசைவு

**16. தொட்டாற் சுருங்கியின் இலையை தொட்டதும் இலைகள் கூம்புதல் எவ்வகையான அசைவு**

1. உறக்க முன்னிலை அசைவு 2. அதிர்ச்சி முன்னிலை அசைவு
3. ஒளி முன்னிலை அசைவு 4. பரிச முன்னிலை அசைவு

**17. தொட்டாற் சுருங்கியின் இலையில் ஏற்பட முடியாத அசைவு**

1. நேர் தொடுகை திருப்ப அசைவு 2. பரிச முன்னிலை அசைவு
3. அதிர்ச்சி முன்னிலை அசைவு 4. உறக்க முன்னிலை அசைவு

**18. திருப்ப அசைவு என அழைக்கப்படுவது**

1. தூண்டலின் திசையால் துலங்ளின் திசையில் அமைந்த அசைவு
2. தூண்டலின் திசையின்ால துலங்களின் செல்வாக்கிற்கு உட்படாத அசைவு
3. தூண்டலின் திசையால் துலங்களின் திசையிலோ அல்லது அதன் எதிர்த்திசையிலான அசைவு
4. தூண்டலின் திசையால் துலங்களின் திசைக்கு எதிர்த்திசையிலுள்ள அசைவு

**19. உயர் காப்பகங்களில் பேணப்படும் சுதேச தாவரம்**

1. கருங்காலி 2. வேம்பு 3. தென்னை 4. பனை

**20. தாவரங்களில் தாங்கும் தொழிலில் பங்கு பற்றாதாது?**

1. நீர் 2. செலுலோசுப்படிவு
3. இலக்னின் படிவு 4. கைற்றின் படிவு

## பகுதி II

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக**

**01. கீறிட்ட இடம் நிரப்புக**

1. முள்ளந்தண்டிலிகள் தமது இடம் பெயர்விற்காக a ...............................................ப் பயன்படுத்தும் அதே வேளை b................................................... தசைகளுடன், என்பையும் பயன்படுத்துகின்றன. தசைகள் என்புகள் ஆகியன c.................................................. உதவுகின்றன. என்புகளினால் உடலுக்கு d...................................... கிடைக்கின்றது. அதாவது உடலைத் e......................................... தொழிலை ஆற்றுகின்றது.

2. தசைக்கலங்களால் ஆற்றப்படும் அசைவுச் செயற்பாட்டிற்காக அவை கொண்டுள்ள சிறப்பியல்புகள் 2 எழுதுக.

...............................................................................................................................................................

...............................................................................................................................................................

3. தசைகளினால் என்புகள் அசைக்கப்படும் முறையை அவதானிப்பதற்கான மாதிரி அமைப்பு கீழே தரப்படுகின்றது.

a. இவ் அமைப்பில் A, B, C, D ஆகிய பகுதிகளை குறித்து மனித முழங்கையுடன் ஒப்பிடுக.

A - .........................................................
B - .........................................................
C - .........................................................
D - .........................................................
E - .........................................................




b. முழங்கையை மேல்நோக்கி மடிக்கும் போது

1. சுருங்கும் தசை - ................................................
2. விரியும் (தளரும்) - ................................................

c. முத்தலைத் தசை சுருங்கும் போது முழங்கை எவ்வாறு இருக்கும்

...............................................................................................................................................................

d. கையை நீட்டலுக்கும் மடித்தலுக்கும் அச்சாக தொழிற்படும் பகுதி எது?

...............................................................................................................................................................

e. முழங்கையின் தொழிற்பாட்டுக்கு அமைய மனிதனால் உருவாக்கப்பட்ட இயந்திரம் எது?

...............................................................................................................................................................

4. பின்வரும் நுண்ணங்கிகளை இனங்கண்டு அவற்றின் அசைவிற்கு உதவும் உறுப்புக்களை குறிப்பிடுக.

| நுண்ணங்கியின் படம் | நுண்ணங்கியின் பெயர் | அசைவிற்கு உதவும் உறுப்பு |
|---|---|---|
|  | | |
|  | | |
|  | | |
|  | | |

02. தாவரங்கள் இடம் பெயராவிடினும் அசைவைக் காட்டுகின்றன.

1. தாவரங்களில் நிகழும் அசைவானது தூண்டலுக்கு நிகழும் துலங்கலாக அமையலாம். இது தவிர தாவர அசைவு ஏற்படக்கூடிய ஏனைய இரண்டு காரணங்களும் எவை?

   1. ............................................................... 2. ...............................................................

2. தாவரங்கள் துலங்கலைக் காட்டும் இரண்டு பிரதான முறைகளும் எவை?

   1. ............................................................... 2. ...............................................................

3. துலங்கலானது தூண்டலின் திசையில் அல்லது தூண்டலுக்கு எதிர்திசையில் நடைபெறும் போது நிகழும் அசைவு பொதுவாக எவ்வாறு அழைக்கப்படும்?

   ..............................................................................................................................

4. நேர் திருப்ப அசைவு, மறைத் திருப்ப அசைவு என்றால் என்ன? அவற்றுக்கு உதாரணம் எழுதுக.

   1. நேர்திருப்ப அசைவு

      ..............................................................................................................................

   2. மறைத்திருப்ப அசைவு

      ..............................................................................................................................

5. திருப்ப அசைவுக்கும் முன்னிலை அசைவிற்கும் இடையிலான வேறுபாடுகள் 2 எழுதுக.

   ..............................................................................................................................

6. இரசனை அசைவு என்றால் என்ன? இது எவ்வங்கியில் நிகழும்?

   ..............................................................................................................................

7. உள்நிலைக் காப்பு என்றால் என்ன? இதன் அவசியம் யாது?

   ..............................................................................................................................

03. தாவர வளர்ச்சினை கட்டுப்படுத்தும் தாவர வளர்ச்சி சீாக்கிகள் தொடர்பான பரிசோதனை அமைப்பு கீழே தரப்பட்டுள்ளது.




A, B இரண்டும் ஒரே வகையான தாவரம் B யில் முனை அரும்பு வெட்டி அகற்றப்பட்டுள்ளது.

1. மேற்படி தாவரங்களிற்கு ஒரே சூழல் நிலமைகளை வழங்கி அவதானிக்கும் போது A, B யில் எவ்வாறான அவதானிப்புக்களைப் பெறுவீர்

   Aயில் அவதானிப்பு .......................................... Bயில் அவதானிப்பு ......................................

2. இவ் அவதானிப்புகளிலிருந்து பெறக்கூடிய முடிவு யாது?

   ........................................................................................................................................................

3. இத்தகைய செயற்பாடு அனுகூலமாக பயன்படுத்தப்படும் பெருந்தோட்டப் பயிர் எது?

   ........................................................................................................................................................

4. மேற்படி பயிர்ச்செய்கையில் நுனிஅரும்பினை அகற்றாதுவிடின் எவ்வாறான இடர்பாட்டை தொழிலாளர்கள் எதிர் கொள்வர்?

   ........................................................................................................................................................

B. ஒட்சிசன் தண்டினதும் வேரினதும் கலங்களின் நீட்சியைக் கட்டுப்படுத்தும்

1. ஒட்சின்கள் தாவரத்தின் எப்பகுதிகளில் உற்பத்தி செய்யப்படுகின்றது.

   ........................................................................................................................................

2. தண்டின் உச்சி ஒளியை நோக்கி வளர்ச்சியடைவதற்கு தண்டில் ஏற்படும் எவ்வாறான செயற்பாடு காரணமாக அமைகின்றது.

   ........................................................................................................................................................

3. ஒட்சின்கள் கலங்களின் நீட்சியையும் தண்டின் உச்சி ஒளியை நோக்கி திரும்புவதையும் கட்டுப்படுத்துகின்றது. இதனை விவரிக்கும் வரிப்படம் கீழே தரப்படுகின்றது.




மேற்படி வரிப்படங்கள் கீழே வரும் விவரணங்களுடன் தொடர்புபடும் எழுத்தை குறிப்பிடுக.

1. ஒளிகுறைவாக கிடைக்கும் பிரதேசத்தில் ஒட்சின் ஒன்று சேர்ந்துள்ளது. (        )
2. ஒட்சின் காரணமாக அப்பிரதேசக் கலங்கள் நீட்சியடைந்து ஒளியுள்ள பக்கத்தை நோக்கி வளைந்து வளர்ச்சியடைந்துள்ளது. (        )
3. ஒளிகிடைக்கும் போது ஒட்சின் கீழ்நோக்கிப் பரவுகின்றது. (        )

அலகு - 09

# அங்கிகளில் நிகழும் கூர்ப்புச் செயன்முறை

* **சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

**1. கூர்ப்பின் தந்தை எனப் போற்றப்படும் விஞ்ஞானி**

1. ஒப்பாரின் 2. சார்ள்ஸ்டாவின்
3. லூயி பாய்ச்சர் 4. மில்லர்

**2. புவியின் ஆரம்ப கால வளிமண்டலத்தில் காணப்படாத வாயு**

1. $CO_2$ 2. $O_2$ 3. $CH_4$ 4. $H_2S$

**3. கோள்களின் கூர்ப்புத் தொடர்பாக முதன்முதலில் முன்வைக்கப்பட்ட கோட்பாடு எது?**

1. நெபியுலாக் கோட்பாடு 2. பெருவெடிப்பு கோட்பாடு
3. சிறப்பு படைப்பு கோட்பாடு 4. அண்டவெளி பிறப்புக் கோட்பாடு

**4. நிரல் Aயிலுள்ள புவியின் மீது அங்கிகளின் தோற்றம் தொடர்பான கொள்கைகளைக்குறிக்கும் நிரல் B**

| நிரல் A | நிரல் B |
|---|---|
| 1. தன்னிச்சை பிறப்பாக்கற் கொள்கை | A. கடவுளினால் படைக்கப்பட்டது |
| 2. சிறப்புப்படைப்பு கொள்கை | B வளிமண்டலத்தில் காணப்படும் வாயுக்கள் இரசாயான தாக்கங்களுக்கு உட்பட்டு உயிரி தோன்றியது. |
| 3. உயிர் இராசயன கூர்ப்புக் கொள்கை | C. உயிரற்றவற்றிலிருந்து உயிருள்ளவை தோன்றியது. |

**நிரல் Aயிலுள்ள கொள்கைகளிற்கு பொருத்தமான விவரணங்கள் நிரல் Bயிலிருந்து முறையே**

1. CAB 2. ABC 3. BCA 4. ACB

**5. தன்னிச்சை பிறப்பாக்கற் கொள்கை தவறானது என நிருபித்த முதல் விஞ்ஞானி**

1. பிரான்சிஸ்கோரெடி 2. லூயி பாச்சர்
3. சார்ள்ஸ் டார்வின் 4. ஒப்பாரின்

**6. புவியின் ஆரம்ப உயிரியாக கருதப்படுவது?**

1. சயனோ பற்றீரியா 2. பங்கசு
3. பற்றீரியா 4. வைரசு

**7. ஆரம்பகால பல்கல அங்கிகளாக கருதமுடியாதது?**

1. பற்றீரியா 2. நிடாரியா 3. அனெலிடா 4. ஆத்திரப்போடா

**8. புவியில் உருவான முதலாவது ஒளித்தொகுப்பு செய்யும் அங்கி எது?**

1. பற்றீரியா 2. பன்னங்கள்
3. சயனோபற்றீரியா 4. பாசிகள்

**9. அங்கிகளின் தோற்றுவாய் தொடர்பான உயிர் இரசாயனக்கூர்ப்புக் கொள்கையை முன்வைத்தவரும் பரிசோதனை ரீதியாக நிருபித்தவரும் முறையே**

1. லூயி பாய்ச்சர், பிரான்சிஸ் கோரெடி 2. சார்ஸ்டார்வின் ஒப்பாரின்
3. ஹல்டின், ஒப்பாரின் 4. வறல்டின், ஒப்பாரினும் ஸ்டான்லி மில்லர்

**10. மனிதக் கூர்ப்பின் ஆரம்பம் எத்தனை வருடங்களுக்கு முன்னர் தோன்றியது.**

1. 12 மில்லியன் 2. 1.2 மில்லியன்
3. 5 மில்லியன் 4. 500000 வருடங்களுக்கு முன்னர்

**11. தாவர உலகம் எதிலிருந்து படிப்படியாக உருவாகியது**

1. சயனோபற்றீரியா 2. பற்றீரியா
3. பாசிகள் 4. ஒளித்தொகுப்பிற்குரிய அல்காக்களிலிருந்து

**12. கூர்ப்புச் செயன்முறையுடன் தொடர்பான பூரணமான உயிர்ச்சுவட்டுச் சான்றுகளுடன் கூடிய விலங்கு எது?**

1. பூனை 2. யானை 3. குதிரை 4. மனிதன்

**13. வாழும் உயிர்ச்சுவடாக கருதமுடியாதது.**

1. மமொத்துகளின் இறந்த உடல் 2. சீலாகாற்மீனினம்
3. இலாம்புச் சிப்பி 4. கரப்பான் பூச்சி

**14. வாழும் உயிர்ச்சுவடுகள் தொடர்பான சரியான கூற்றுக்கள் எவை?**

A. ஆரம்ப காலத்தில் காணப்பட்ட உடலியல்புகளை மாற்றிக் கொள்ளாமல் தற்போதும் வாழும் அங்கிகள் வாழும் உயிர்ச்சுவடுகள் எனப்படும்.
B. கூர்ப்பிற்குட்படாத அங்கிகள் வாழும் உயிர்ச் சுவடு எனப்படும்
C. விலங்குகளின் என்புக்கூடுகள் பற்கள் ஓடுகள் போன்ற கடினமான பகுதிகள் உயிர்ச்சுவடுகள் எனப்படும்.

1. ABC 2. AB மட்டும் 3. BC மட்டும் 4. AC மட்டும்

**15. உயிரிரசாயனக் கொள்கையின் மூலம் முதல் முதல் உயிரி தோன்றும் படிமுறைகளை ஒழுங்குபடுத்துக.**

A. வளிமண்டலத்தில் காணப்பட்ட வாயுக்கள் இரசாயனத்தாக்கங்களிற்கு உட்படல்
B. உருவான பதார்த்தங்கள் மழைநீரில் கரைந்து ஆதிக்கூழ் உருவாதல்
C. தாக்கங்களிற்கு தேவையான சக்தி மின்னல் கழியூதாக் கதிர்மூலம் பெறப்பட்டது.
D. ஆரம்ப உயிர்க்கலம் ஆதிக்கூழிலிருந்து உயிர் இரசாயனத் தாக்கங்களின் விளைவாக தோன்றுதல்

1. ABCD 2. ADBC 3. ACBD 4. DBCA

**16. லூயி பாய்ச்சரினால் தன்னிச்சை பிறப்பாக்கற் கொள்கை தவறு என நிருபிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட குடுவை**

1. வட்ட அடிக்குடுவை 2. கூம்புக்குடுவை
3. தட்டை அடிக்குடுவை 4. அன்னக் கழுத்துக் குடுவை

**17. உயிர்க்கூர்ப்பு தொடர்பான முடிவுகளிற்கு வரும் போது சான்றாக கொள்ள முடியாதது.**

1. பூகோள விலங்குப் பரம்பல்களிலிருந்து பெறப்படும் சான்று
2. வான சாஸ்திரம்
3. ஒப்பீட்டு உடலமைப்பில் சான்று
4. சுவட்டுக் கற்கைகள்

**18. புவியின் ஆரம்ப வளிமண்டலத்திலுள்ள வாயுக்கள் இரசாயனத் தாக்கங்களிற்குட்பட தேவையான சக்தி பெறப்படாத மூலம்?**

1. புவிவெப்பசக்தி 2. மின்னல்
3. எரிமலை வெடிப்புக்கள் 4. சூரியனின் கழியூதாக்கதிர்

**19. சீலாகாற் மீனினம் மீண்டும் கண்டுபிடிக்கப்பட்ட ஆண்டும் இடமும் முறையே,**

1. 1938 தம்பலகாமப் குடாப்பகுதி
2. 1938 தென்னாபிரிக்காவிற்கு அருகிலுள்ள கடல்
3. 1938 தென்னபிரிக்காவிற்கு அருகிலுள்ள கடலில்
4. 1983 தம்பலகாமம் குடாப்பகுதி

**20. புவியின் மீது அங்கிகளின் தோற்றம் தொடர்பாக தற்போது ஏற்றுக் கொள்ளப்பட்ட கொள்கை**

1. சிறப்புப் பாடப்புக் கொள்கை
2. தன்னிச்சை பிறப்பாக்கற் கொள்கை
3. உயிர் இரசாயன கூர்ப்புக் கொள்கை
4. அண்டவெளிப் பிறப்புக் கொள்கை

## பகுதி II

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக**

**01. அங்கிக் கூர்ப்பு தொடர்பான கற்கையின் போது அகிலத்தின் தோற்றுவாய் மற்றும் உயிரிகளின் தோற்றுவாய் பற்றி ஆராயப்படும்.**

1. வெள்ளுடுத் தொகுதிகள், சூரியன் மற்றும் ஏனைய கோள்கள் உருவான விதத்தினை முன்வைக்கும் முதலாவது கோட்பாடு எது?

.............................................................................................................................................

.............................................................................................................................................

2. மேற்படி கோட்பாட்டின்படி கோள்கள் எவ்வாறு உருவானதாக குறிப்பிடப்படுகின்றது?

.............................................................................................................................................

.............................................................................................................................................

3. புவியின் தோற்றுவாய் பற்றி தற்போது ஏற்றுக் கொள்ளப்பட்ட கோட்பாடு எது?

.............................................................................................................................................

4. இக்கோட்பாட்டின் படி புவி உட்பட ஏனைய கோள்கள் வெள்ளுடுத்தொகுதிகள் எவ்வாறு உருவானது?

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

02.1 ஆரம்பத்தில் புவியில் காணப்பட்ட நிலமைகள் யாவை?

a. .........................................................................................................................................

b. .........................................................................................................................................

2. புவிக்கோளம் குளிர்ச்சியடைந்தும் புவியின் a - அகணி b - மேலோடு எவ்வாறு உருவாகின?

a. .........................................................................................................................................

b. .......................................................................................................................................3.

புவியின் ஆரம்ப கால வளிமண்டலத்திலுள்ள வாயுக்கள் எவ்விதம் உருவாகியது.

.............................................................................................................................................................

4. புவியின் ஆரம்ப காலத்தில் முகில்கள் எவ்விதம் உருவாகியது?

.............................................................................................................................................................

5. புவியில் சமுத்திரங்கள் எவ்வாறு உருவாகியது?

.............................................................................................................................................................

**02. இற்றைக்கு 3.5 பில்லியன் வருடங்களுக்கு முன்பதாக புவியில் அங்கிகள் தோன்றியதாக கருதப்படுகின்றது.**

01)1. புவியில் உயிரின் தோற்றம் தொடர்பாக முன்வைக்கப்பட்ட கொள்கைகள் 4ம் எவை?

1 .............................................................................. 2. .......................................................................................

3 .............................................................................. 4. .......................................................................................

2. இவற்றுள் தற்போது ஏற்றுக் கொள்ளப்பட்ட கொள்கை எது?

.............................................................................................................................................................

3. வேற்றுக் கிரக விண்வெளி ஊர்திகள் புவியை வந்தடைந்ததனால் புவியில் உயிர்கள் தோன்றின எனக்கூறும் கொள்கை எது?

.............................................................................................................................................................

02)1. காலத்துடன் குறித்த சூழலிலுள்ள அங்கிகளின் உடலிலுள்ளம் படிப்படியான மாற்றங்கள் ஏற்படுவது ஏன்?

.............................................................................................................................................................

2. உயிரங்கிகளின் கூர்ப்பு என்பதனால் கருதப்படுவது எதனை?

.............................................................................................................................................................

3. உயிர்ச்சுவடுகள் என்றால் என்ன?

.............................................................................................................................................................

.............................................................................................................................................................

4. உயிர்சுவடுகள் எவ்வாறான இடங்களில் காணப்படுகின்றன.

.............................................................................................................................................................

5. உயிர்ச்சுவடுகளிற்கு உதாரணம் 2 எழுதுக?

1 .............................................................................. 2. .......................................................................................

6. மாதிரி உயிர்ச்சுவடு தயாரிக்க பயன்படுத்தக்கூடிய மூலப்பொருட்கள் 2 எழுதுக?

.............................................................................................................................................................

.............................................................................................................................................................

**03. உயிர்ச்சுவட்டுச் சான்றுகளின் அடிப்படையில் அங்கிகளின் கூர்ப்பு தொடர்பான முடிவுகளுக்கு வரும் போது பல்வேறு பிரச்சினைகள் தோன்றக்கூடும்.**

01)1. அங்கிக் கூர்ப்பு தொடர்பான தகவல்களை பெறக்கூடிய வழிமுறைகள் 2இனை எழுதுக.

1 .............................................................................. 2. .......................................................................................

3 .............................................................................. 4. .......................................................................................

2. உயிர்ச்சுவடுகளின் வயதினை எவ்வாறு தீர்மானிக்கலாம்

.......................................................................................................................................................................

3. குதிரை தவிர ஏனைய அங்கிகளிற்கு கூர்ப்பு தொடர்பான முழுமையான வரலாறை பெறமுடியாமல் போனது ஏன்?

.......................................................................................................................................................................

4. நவீன குதிரையின் மூதாகத எத்தனை வருடங்களுக்கு முன் எங்கு வாழ்ந்ததாக கருதப்படுகின்றது?

.......................................................................................................................................................................

5. குதிரையினத்தில் எவ்வாறான செயற்பாடுகளிற்காக கூர்ப்பு ரீதியிலான மாற்றங்கள் ஏற்பட்டன?

.......................................................................................................................................................................

6. மனிதக் கூர்ப்பு தொடர்பாக இலங்கையிலிருந்து கிடைக்கப்பெற்ற சான்றுகளுக்குரிய இடங்கள் 3 இணைப் பெயரிடுக.

.......................................................................................................................................................................

7. புவியில் அழிவடைந்தது எனினும் உயிர்ச்சுவடுகள் மூலம் கண்டுபிடிக்கப்பட்ட அங்கிகளுக்கு உதாரணம் 2 எழுதுக?

.......................................................................................................................................................................

.......................................................................................................................................................................

8. குதிரையின் கூர்ப்புச் செயற்பாட்டின் போது அவற்றின் பாதங்களில் ஏற்பட்ட வியத்தங்களை குறிப்பிடுக.

.......................................................................................................................................................................

9. கூர்ப்பின் முக்கியத்துவங்கள் 2 இணை எழுதுக.

.......................................................................................................................................................................

.......................................................................................................................................................................

# அலகு - 10

# மின்பகுப்பு

* **சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

**1. கீழே தரப்பட்டவற்றுள் மின்னைக் கடத்தக்கூடிய மின்பகுபொருள் எது?**

1. தூயநீர்
2. தூயநீரில் கரைக்கப்பட்ட NaCl கரைசல்
3 குளுக்கோசுக்கரைசல்
4. மண்ணெண்ணெய்

**2. கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களில் தவறானது?**

1. திண்ம சோடியங்குளோரைட் மின்னை கடத்தாது
2. உருகிய சோடியம் குளோரைட்டு மின்னைக் கடத்தும்
3. சோடியம் குளோரைட்டு நீர்க்கரைசல் மின்னைக்கடத்தும்
4. உருகிய சோடியம் குளோரைட்டில் அசையும் அயன்கள் இல்லை

**3. மின்பகு பொருட்கள் மின்னைக் கடத்துவதற்கான காரணம்?**

1. அதில் மூலக்கூறுகள் காணப்படுகின்றமை
2. அதில் அணுக்கள் நிலையாக காணப்படல்
3. அதில் அசைகின்ற அயன்கள் காணப்படுகின்றமை
4. அவை ஆவிப்பறப்பு குறைந்தவை ஆகையால்

**4. அருகிற் காட்டப்பட்ட மின்பகுப்புச் செயற்பாடு தொடர்பான சரியான கூற்று**




1. X மின்வாய் மறையாகும்.
2. Y மின்வாய் நேரானதாகும்
3. X மின்வாய் நேரானது
4. Y மின்வாயில் வாயில் வாயுக்குமிழ்கள் படியும்

**5. மின்பகுப்பு செயன்முறையுடன் தொடர்புடைய கூற்றுக்கள் கீழே தரப்படுகின்றன.**

A. திண்ம அயன்சேர்வைகளில் அயன்கள் காணப்பட்டாலும் அவை சுயாதீனமாக அசையாது

B. மின்பகு பொருளுடன் இரசாயனத் தாக்கமடையாத மின் வாய்கள் சடத்துவமின் வாய்கள் எனப்படும்

C. மின்பகு பொருளினூடாக மின்னோட்டத்தைச் செலுத்தி அதனை இரசாயன மாற்றத்திற்கு உட்படுத்துதல் மின்னரிப்பு எனப்படும்.

1. AC 2. BC 3. ABC 4. AB

**6. மின்வாய்கள் தொடர்பான தவறான கூற்று**

1. காபன் மின்வாய் மின்பகுபொருளுடன் தாக்கமடையும்
2. மின்பகு பொருளினூடு மின்னோட்டம் பாய்கின்ற வெளியேறுகின்ற கடத்திகள் மின்வாய்கள் எனப்படும்
3. சடத்துவ மின்வாய்களுக்கு உதாரணமாக காபன், பிளற்றினத்தினை குறிப்பிடலாம்
4. ஒரு மின்வாயினூடாக கரைசலினுள் பாய்கின்ற மின்னோட்டம் மற்றைய மின்வாயினூடு கரைசலிருந்து வெளியேறும்.

**7. அருகிலுள்ள மின்பகுப்புச் செயற்பாட்டின் அவதானம் அல்லாதது,**




1. மின்வாய் Aயில் வாயுக்குமிழ்கள் படியும்
2. மின்வாய் Bயில் வாயுக்குமிழ்கள் படியும்
3. மின்வாய் Bயில் கபில நிறப்படிவு ஏற்படும்
4. $CuSo_4$ கரைசலின் நீலநிறம் குறைவடையும்.

**8. காபன் மின்வாயைப் பயன்படுத்தி அமிலம் துளிர்த்த நீரை மின்பகுக்கும் போது அனோட்டிற்கு அண்மையில் வெளியேறும் வாயு எது?**

1. ஒட்சிசன் 2. ஐதரசன் 3. குளோரின் 4. நைதரசன்

**9. மின்பகுப்பின் பிரயோகமாக அமைய முடியாததது எது?**

1. உலோகப் பிரித்தெடுப்பிற்கு
2. கைத்தொழில் ரீதியில் (NaOH) எரிசோடா தயாரிக்க
3. மின் முலாமிடுவதற்கு
4. கடல்நீரை சுத்திகரிக்க

**10. மின் உலோக முலாமிடல் தொடர்பான சரியான கூற்றுக்கள்**

A. முலாமிடவேண்டிய பொருள் கதோட்டாக கருதப்படும்

B. மின்பகு பொருள் அடர்த்தி கூடிய கரைசலாக இருக்க வேண்டும்

C. முலாமிடுவதற்கு பயன்படுத்தப்படும் உலோகத்தின் உப்புக்கரைசல் கரைசலின் மின்பகு பொருளாக வேண்டும்.

D. அனோட்டு முலாமிடப்படும் உலோகத்தினால் ஆன கோலாக காணப்படல் வேண்டும்.

**11. படத்தில் மின்முலாமிடலின் அவதானமாக அமைய முடியாதது.**




1. இரும்பாணியின் மீது Cu படியும்
2. செப்புத் தகடு கரையும்
3. Cu தகட்டுக்கண்மையில் வாயுக்குமிழ் வெளிவரும்
4. கரைசலினூடு நேர்மின்னோட்டம் செலுத்தப்படுகின்றது.

**12. சிறந்த தரமான மின்முலாமிடலுக்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை அல்லாதது**

1. முலாமிடலின் போது மின் இரசாயன மாற்றம் மிக வேகமாக இடம்பெற வேண்டும்.
2. மின்பகு பொருள் மிக ஐதாக இருத்தல் வேண்டும்.
3. கரைசலினூடாக சிறிய மின்னோட்டம் செலுத்தப்படல் வேண்டும்
4. மின்னழுத்த வித்தியாசமும் குறைந்ததாக இருத்தல் வேண்டும்.

**13. வெள்ளி வளையல் மீது பொன் முலாமிடுவதற்கு பயன்படுத்த வேண்டிய அனோட், மின்பகு பொருட்களை முறையே குறிப்பது,**

1. வெள்ளித்தகடு, ஐதான வெள்ளி உப்புக்கரைசல்
2. பொன்தகடு, ஐதான பொன் உப்புக்கரைசல்
3. பொன்தகடு, மிக ஐதான வெள்ளி உப்புக்கரைசல்
4. பொன்தகடு, செறிந்த பொன் உப்புக் கரைசல்

**14. நிரல் Aயில் குறிப்பிடப்படும் கலைச் சொல்லுக்கான உதாரணங்கள் நிரல் Bயிலிருந்து தெரிவு செய்யப்படும் ஒழுங்கை சரியாக குறிப்பது,**

| நிரல் A | | நிரல் B | |
|---|---|---|---|
| 1. | மின்பகு பொருள் | a. | காபன், பிளாற்றினம் |
| 2. | மின்வாய்கள் | b. | சோடியம் பிரித்தெடுத்தல், சோடியம் ஐதரொட்சைட் தயாரிப்பு |
| 3. | மின்முலாமிடல் | c. | உப்புக்கரைசல், செப்பு சல்பேற்று கரைசல் |

1. c a b  2. a b c  3. c b a  4. a c b

**15. மின்முலாமிடலின் பிரயோகங்கள் பற்றிய பின்வரும் கூற்றுகளை அவதானித்து விடையளிக்குக.**

கூற்று A. - மின்பகுப்பின் பிரயோகங்களில் ஒன்றே மின் முலாமிடல்

கூற்று B. - முலாமிடப்படும் பொருளின் மேற்பரப்பில் காணப்படாத இயல்பு முலாமிடும் உலோகத்தில் காணப்பட வேண்டும்

1. கூற்று AB பிழையானவை  2. கூற்று AB உண்மை
3. கூற்று A சரி Bபிழை  4. B சரியானது A பிழை

**16. இரும்புப் பொருள்மீது நிக்கல் முலாமிடப் படுவதனால் கிடைக்கும் பயன் / பயன்கள்?**

1. துருப்பிடிக்காது  2. கவர்ச்சியான தோற்றம்
3. பெறுமதி கூடுதலாக மாறும்  4. 1, 2 விடைகள் சரியானவை

**17. முலாமிடலுக்கு பயன்படுத்த முடியாத உலோகம் எது?**

1. Cu  2. Ag  3. Fe  4. Ni

**18. பின்வருவனவற்றில் முலாமிட முடியாத உபகரணம்**

1. இரும்பாணி  2. பிளாஸ்ரிக் சாடி
3. கரண்டி  4. திறப்பு

**19. அமிலம் துமிக்கப்பட்ட நீரினை மின்பகுக்கும் போது வெளிவரும் $O_2 : H_2$ வாயுக்களிற்கிடையிலான விகிதம்**

1. 1:2  2. 2:1  3. 1:1  4. 2:3

**20. அமிலம் துமித்த நீரினை மின்பகுப்பதற்கு பயன்படுத்த வேண்டிய மின்கலத்தின் வோல்ற்றளவு எவ்வளவு?**

1. 1.5V  2. 3V  3. 12V  4. 9V

## பகுதி II

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக**

**01. அமிலம் துமிக்கப்பட்ட நீரினை மின்பகுப்புச் செய்யும் செயற்பாடு கீழே படத்தில் காட்டப்பட்டுள்ளது.**



1. இங்கு மின்வாய்களாக எதனைப் பயன்படுத்துகின்றனர்?

..............................................................................................................................................

2. மின்பகுபொருள் எது?

..............................................................................................................................................

3. மின்பகு பொருளிலுள்ள அயன்கள் எவை?

..............................................................................................................................................

4. நீரிற்கு அமிலம் சேர்க்கப்பட்டது ஏன்?

..............................................................................................................................................

5. இப்பரிசோதனையின் பொதுவான அவதானம் யாது?

..............................................................................................................................................

6. இங்கு நேர், மறை மின்வாய்கள் எவை?

..............................................................................................................................................

7. நேர்மின்வாயில் வெளியேறும் வாயு எது?

..............................................................................................................................................

8. மறை மின்வாயில் வெளியேறும் வாயு எது?

..............................................................................................................................................

9. நேர்மறை மின்வாயில் வெளியேறும் வாயுக்களின் கனவளவுக் கிடையிலான விகிதம் யாது?

..............................................................................................................................................

10. எந்த மின்வாயிலுள்ள பரிசோதனைக்குழாயில் எரியும் தணற்குச்சை செலுத்தும் போது பொப் எனும் சத்தத்துடன் எரிந்து அணையும்?

..............................................................................................................................................

**02. செப்பு மோதிரத்தின் மீது பொன் முலாமிடும் மின்பகுப்புக் கலம் படத்தில் காட்டப்பட்டுள்ளது.**




1. மின்பகுபொருள் B யாக பயன்படுத்தக்கூடிய கரைசல் எந்த உலோகத்தின் உப்பாக இருத்தல் வேண்டும்

..............................................................................................................................................

2. மின்கலங்கள் எவ்விதம் இணைக்கப்படல் வேண்டும் என்பதனை தொடரிணைப்பில் இடமிருந்து வலமாக மின்சுற்றுக்குரிய வரிப்படத்தில் வரைக.

3. மின்வாய் A யாக எவ்வுலோகத் தகடு பயன்படுத்தப்படல் வேண்டும்?

..............................................................................................................................................

4. உலோகத்தகடு A மோதிரம் எவ்வகை மின்வாயாக தொழிற்படும்

..............................................................................................................................................

5. தரமான மின்முலாமிடலுக்காக பின்வரும் விடயங்கள் எவ்வாறாக பேணப்படல் வேண்டும்?

a. மின்பகுபொருளின் செறிவு

..............................................................................................................................................

b. மின்னோட்டம்

..............................................................................................................................................

c. மின்னழுத்த வித்தியாசம்

..............................................................................................................................................

6. செயற்பாட்டு முடிவில் மோதிரம் சிறந்த தரத்தில் முலாமிடப்பட்டுள்ளது. என்பதனை எப்பண்புகளின் அடிப்படையில் உறுதிப்படுத்திக் கொள்வீர்?

..............................................................................................................................................

**03. திரவ நிலையிலுள்ள திரவியங்கள் மின்னைக் கடத்துகின்றனவா என்பதனை அறிவதற்கான செயற்பாடுகள் கீழே காட்டப்பட்டுள்ளன.**




A B C D

1. அம்பியர் மானியில் திரும்பல் ஏற்படுத்திய கரைசல்கள் எவை? திரும்பல் ஏற்பட்டமைக்கான காரணம் யாது?

..............................................................................................................................................

..............................................................................................................................................

2. அம்பியர் மானியில் திரும்பல் ஏற்படாத கரைசல்கள் எவை? திரும்பல் ஏற்பட்டமைக்கான காரணம் யாது?

..............................................................................................................................................

..............................................................................................................................................

3. இங்கு உப்புக்கரைசலுக்கு பதிலாக உப்புக்கற்களை இட்ட போது ஏற்படக்கூடிய அவதானம் யாது?

..............................................................................................................................................

4. அவதானத்திற்குரிய காரணம் யாது?

..............................................................................................................................................

5. உப்புக்கற்களை வெப்பமேற்றி உருகிய நிலைக்கு மாற்றியபின் மேற்படி செயற்பாட்டை செய்தால் திரும்பலை காட்டுமா? காரணம் யாது?

.............................................................................................................................................

.............................................................................................................................................

6. இப்பரிசோதனைகளின் முடிவு யாது?

.............................................................................................................................................

7. மின்பகுப்பு என்றால் என்ன?

.............................................................................................................................................

8. மின்பகுப்புச் செயன்முறையில் காபன் அல்லது பிளற்றினத்தினை மின்வாய்களாக பயன்படுத்தப்படுவதன் காரணம் யாது?

.............................................................................................................................................

04.

1. வீட்டில் பயன்படுத்தப்படும் முலாமிடப்பட்ட உபகரணங்கள் 2 இணை எழுதுக?

.............................................................................................................................................

2. உலோகத்தட்டு (tray) மீது எத்தகைய உலோகங்களை மூலாமிடுவதனால் வெள்ளி பூசப்பட்டது போன்ற தோற்றத்தை பெறலாம்.

.............................................................................................................................................

3. மோட்டார் வாகனங்களின் பகுதிகளில் துருப்பிடிப்பதை தடுப்பதற்கு பயன்படுத்தக்கூடிய உலோகங்கள் 2 எழுதுக?

.............................................................................................................................................

4. முலாமிடப் பயன்படும் உலோகங்கள் கொண்டிருக்கக்கூடிய இயல்புகள் 2 எழுதுக.

.............................................................................................................................................

.............................................................................................................................................

5. ஆபரணங்களுக்கு பொன் முலாமிட விரும்புவதன் காரணம் யாது?

.............................................................................................................................................

6. இரும்புத் தகட்டின் மீது வெள்ளி முலாமிடலுக்கான அமைப்பினை பூரணப்படுத்துக. X, Y யில் இணைக்கப்படவேண்டிய பகுதிகளையும் மின்பகுபொருள் எது என்பதனையும் குறிப்பிடுக.




X .............................................................................................................................................

Y .............................................................................................................................................

மின்பகுபொருள் ..........................................................................................................................

7. மின்முலாமிடல் தவிர்ந்த மின்பகுப்பின் பிரயேகங்கள் இரண்டினை எழுதுக.

.............................................................................................................................................

.............................................................................................................................................

## அலகு - 11
# அடர்த்தி

* **சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

**1. யாதாயினும் ஒரு பதார்த்தத்தின் ஓரலகு கனவளவின் திணிவு அப்பதாரத்தத்திற்குரிய வ்வியல்பை குறிக்கும்**

1. அமுக்கம் 2. அடர்த்தி 3. உருகுநிலை 4. சார்படர்த்தி

**2. அடர்த்தியை அளவிடும் சர்வதேச அலகு பின்வருனவற்றில் எது?**

1. $gcm^{-3}$ 2. $gml^{-1}$ 3. $kgm^{-3}$ 4. $kgl^{-1}$

**3. $100cm^3$, $200cm^3$, $300cm^3$ நீர் முகவையில் எடுக்கப்பட்டு அவற்றின் திணிவுகள் பெறப்பட்டன. பின் $\frac{\text{நீரின் திணிவு}}{\text{நீரின் கனவளவு}}$ = விகிதம் பெறப்பட்டன. இவ்விகிதம் பற்றிய சரியான கூற்று எது?**

1. திணிவிற்கும், கனவளவிற்கும் இடையிலான விகிதம் மாறிலியாகும்.
2. திணிவிற்கும், கனவளவிற்கும் இடையிலான விகிதம் மாறுபடும்
3. திணிவிற்கும் கனவளவிற்கும் இடையிலான விகிதம் பற்றி கூற முடியாது
4. $100cm^3$ நீரின் விகிதத்தை விட $300cm^3$ நீரின் விகிதம் அதிகமாக காணப்படும்.

**4. அடர்த்தியை கணிப்பதற்காக பயன்படும் சமன்பாடுகளில் மிகச்சரியானது எது?**

1. $\text{அடர்த்தி} = \frac{\text{கனவளவு}}{\text{திணிவு}}$
2. $\text{அடர்த்தி} = \frac{\text{திணிவு}}{\text{கனவளவு}}$
3. அடர்த்தி = திணிவு x கனவளவு
4. அடர்த்தி = கனவளவு x திணிவு

**5.**




**இங்கு அடர்த்தி கூடிய திரவம் எது?**

1. திரவம் A 2. நீர்
3. திரவம் C 4. கூறமுடியாது.

**6. திரவங்களின் அடர்த்தியை அளவிடுவதற்கு பொதுவாக ஆய்வு கூடத்தில் பயன்படும் கருவி எது?**

1. அடர்த்திமானி 2. வெப்பமானி 3. நீரமானி 4. அடர்த்திக்குப்பி

**7.** **சமதிணிவுடைய நான்கு திரவங்கள் சமகனவளவுள்ள முகவையில் எடுக்கப்பட்டுள்ளதை படம் காட்டுகிறது.**




**இதில் அடர்த்தி கூடிய திரவம் எது?**

1. A  2. B  3. C  4. D

**8.** **ஆய்வு கூடத்தில் காணப்படும் அடர்த்தி கூடிய திரவம் எது?**

1. நீர்  2. மதுசாரம்
3. மண்ணெண்ணெய்  4. இரசம்

**9.** **மூன்று வெவ்வேறான திரவங்களில் முட்டை மிதக்கவிடப்பட்ட போது பெறப்பட்ட அவதானம் படத்தில் காட்டப்பட்டுள்ளது?**




**இங்கு அடர்த்தி குறைந்த திரவம் எது?**

1. P  2. Q  3. R  4. கூறமுடியாது

**10.** **நான்கு வெவ்வேறு திரவங்களில் $0.5m^3$ எடுக்கப்பட்டு அதன் திணிவுகள் பெறப்பட்டன.**

**இரசம் 6800kg**  **பால் 515kg**

**தேங்காய் எண்ணெய் 450kg**  **பெற்றோல் 400kg**

**இதில் அடர்த்தி குறைந்த திரவம் எது?**

1. இரசம்  2. பால்
3. தேங்காய் எண்ணெய்  4. பெற்றோல்

## பகுதி II

**01.** **அட்டவணையைப் பூர்த்தி செய்க.**

| பதார்த்தம் | திணிவு(kg) | கனவளவு ($m^3$) | அடர்த்தி ($kgm^{-3}$) |
|---|---|---|---|
| A | 2000 | 2 | ---------------- |
| B | ---------------- | 4 | 800 |
| C | 515 | 0.5 | ----------------- |
| D | 2700 | ----------------- | 900 |

02.




1. நீரிலும் அடர்த்தி குறைந்த பொருட்கள் எவை?

..........................................................................................................................................

2. நீரின் அடர்த்திக்கு சமனான பொருட்கள் எவை?

..........................................................................................................................................

3. நீரை விட அடர்த்தி கூடிய பொருட்கள் எவை?

..........................................................................................................................................

03. P, Q, R, S ஆகிய பொருட்கள் திரவங்களில் மிதப்பது படத்தில் காட்டப்பட்டுள்ளது.




1. Pயின் அடர்த்தி மண்ணெண்ணெயின் அடர்த்திக்குச் சமமானதா / குறைவானதா?

..........................................................................................................................................

2. பெற்றோலின் அடர்த்தியை விட கூடியதும், தேங்காய் எண்ணெயின் அடர்த்தியை விட குறைந்ததுமான பொருள் எது?

..........................................................................................................................................

3. நீரின் அடர்த்திக்கு சமனான பொருள் எது?

....................................................................................................................................................................

4. நீரை விட அடர்த்தி கூடிய பொருள் எது?

....................................................................................................................................................................

5. $4m^3$ கனவுள்ள பாத்திரத்தில் உள்ள திரவத்தின் திணிவு 3600kg எனில் அதன் அடர்த்தி யாது?

....................................................................................................................................................................

**கீறிட்ட இடம் நிரப்புக.**

பசுப்பாலில் .......................................... வீதம் நீர் காணப்படும். பாலில் நீருடன் ............................., ................. என்பனவும் உண்டு. பாலின் அடர்த்தியை அளவிட ................................. பயன்படும். வைன், பியர் ஆகிய மதுபானங்களில் உள்ள அற்ககோலின் சதவீதத்தை அளவிட ..................................... பயன்படும். இறப்பர்பாலின் அடர்த்தியை அளவிட .................................. பயன்படும். சாக்கடலில் மனிதன் மூழ்காது மிதிப்பதற்கு அக்கடல் நீரின் ............................................ உயர்வாக இருப்பதே காரணமாகும்.

அலகு - 12

# உயிர்ப்பல்வகைமை

* **சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

**1.** **A - சூழல் தொகுதிப் பல்வகைமை**

**B - இனப்பல்வகைமை**

**C - பரம்பரையலகுப் பல்வகைமை**

**இங்கு தரப்பட்டவற்றில் உயிர்ப்பல்வகைமையில் அடங்குபவன எவை?**

1. A, B  2. B, C  3. A, B, C  4. A, C

**2.** **பின்வருவனவற்றில் உயிர்ப்பல்வகைமையின் முக்கியத்துவமாக கருத முடியாதது எது?**

1. சூழல் வனப்பு அதிகரிக்கும்
2. அங்கிகளிற்கிடையிலான போட்டி குறையும்
3. சூழல் மாசடைதல் அதிகரிக்கும்
4. நீர், மண் மூலகங்கள் பாதுகாக்கப்படும்.

**3.** **புவியில் வாழ்ந்து இனமழிதலுக்குள்ளான கம்பளி யானை அழிந்ததற்கான காரணமாக அமைவது பின்வருவனவற்றில் எது?**

1. விண்கல் வீழ்ந்தமை  2. எரிமலை வெடிப்பு
3. சூழல் வெப்பம் அதிகரித்தல்  4. காட்டுத்தீ

**4.**



**இங்கு தாவரங்களின் வேர் வெவ்வேறு மட்டத்தில் இருப்பதால் கிடைக்கும் நன்மை யாது?**

1. நீரைப் பெற்றுக்கொள்வதற்கான போட்டி குறைவு
2. ஒளிக்கான போட்டி குறையும்
3. மண்ணிற்கான போட்டி குறையும்
4. கனிப்பொருட்களை பெறுவதற்கான போட்டி குறையும்

**5.** **எமது நாட்டிற்கே உரிய சுதேச இனமாக கருதப்படும் விலங்கு எது?**

1. குரங்கு  2. மான்  3. புலி  4. யானை

**6.** **விவசாயத்துறையில் பயன்படும் வான்வகை தாவர விலங்குகளில் உள்ள பரம்பரை அலகுகளினால் கிடைக்கும் நன்மையான இயல்பு அல்லாதது எது?**

1. பீடைகளிற்கு ஈடுகொடுத்து வளர்தல்
2. தகாத சூழலை சகித்துக் கொள்ளல்
3. புதிய இயல்புகளை தோற்றுவித்தல்
4. நோய்களிற்கு தாக்குப்பிடித்தல்

**7. உயிர்பல்வகைமைக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடியதாக கருதப்படும் வேற்றுப் பரதேச ஆக்கிரமிப்பு இனமாக கருத முடியாத அங்கி எது?**

1. நாயுண்ணி  2. பார்த்தீனியம்  3. பட்டிப்பூ  4. தொட்டிமீன்

**8. உயிருள்ளவை - உயிருள்ளவை இடைத்தொடர்பாக கருதமுடியதது பின்வருவனவற்றுள் எது?**

1. விலங்குகள் - தாவரங்களை உணவாக உட்கொள்ளல்
2. தாவரங்களும், விலங்குகளும் சுவாசத்திற்கு ஒட்சிசனை பெற்றுக்கொள்ளல்
3. இரைகௌவி விலங்குகள் வேறு விலங்குகளை உணவாக உண்ணல்
4. சில விலங்குகளின் வாழிடமாக தாவரம் காணப்படல்

**9. ஒளித்தொகுப்புச் செயற்பாட்டிற்காக தாவரங்கள் சூழலிலிருந்து பல்வேறு காரணிகளைப் பெற்றுக் கொள்வதை படம் காட்டுகிறது.**



**இங்கு உருவாகும் இடைத்தொடர்பு யாது?**

1. உயிருள்ளவை - உயிருள்ளவை இடைத்தொடர்பு
2. உயிருள்ளவை - உயிரற்றவை இடைத்தொடர்பு
3. உயிரற்றவை - உயிரற்றவை இடைத்தொடர்பு
4. உயிருள்ளவை - உயிரற்றவை - உயிருள்ளவை இடைத்தொடர்பு

**10. A - ஆறு, B - பொங்கு முகம், C - கடனீரேரி, D - உள்நாட்டு நீர் நிலைகள் இவற்றில் சவர்நீரைக்கொண்ட நீர்ச்சூழல் தொகுதிகள் எவை?**

1. A, B  2. B, C  3. C, D  4. A, D

**11. நிரல் A யில் தரப்பட்ட இயல்புகளை கொண்ட சூழல் தொகுதியை நிரல் B யுடன் இணைக்கும் போது பெறப்படும் சரியான விடை எது?**

| நிரல் A | | நிரல் B |
|---|---|---|
